දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி )
postmaster@health.gov.lk
e-mail )

මගේ අංකය )
எனது இல ) DDG (MS) 1/59/2018
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

දිනය )
திகதி ) 2018.09.07
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணைமற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

<u>பொது சுற்றறிக்கை இலக்கம்</u> 01-40/2018

மாகாண செயலாளர்கள்,
மாகாண / பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
மாகாண வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்
நிறுவனத்தலைவர்கள்

<u>தேசிய விஷ தடுப்பு வாரம்-2018 செப்தெம்பர் 10-16</u>

தேசிய விஷ தடுப்பு வாரம், இலங்கை தேசிய விஷ தகவல்கள் மையத்தினால் சுகாதார அமைச்சின் அனுசரனையுடன் 2007 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் தேசிய சுகாதார நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாகும். இதனூடாக பல்வேறு விதமாக விஷமூட்டப்படுவதைத் தடுத்தல் மற்றும் விஷப் பொருட்கள் தொடர்பில் பொது மக்களுக்கும் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

2016 இல் வெளியிடப்பட்ட தேசிய தரவுகளின் பிரகாரம் இலங்கையில் வீட்டிற்குள் விஷத்திற்குள்ளாகுதல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. 2016 இல் மருந்துகள் அல்லாத, வேறு விதமாக வீட்டில் நிகழும் விஷங்கள் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் விஷம் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 42095 ஆகும். இந்த எண்ணிக்கையானது முறையே மருந்துகள் சார்ந்த விஷங்கள் (23,807) மற்றும் பூச்சிகொல்லி விஷங்கள் (12,692) என்பவற்றை விட அதிகமானது என்பது வெளிப்படையாக உள்ளது.

வீட்டில் ஏற்படும் விஷங்கள், பூச்சிகொல்லி மருந்து விஷங்கள் முழுமையாகத் தடுக்கப்படக் கூடியதாகும். இது சமூகத்தினால் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு என்பவற்றை அதிகரிப்பதினூடாக அடையப்படலாம். ஆகையால் பொது மக்களுக்கு தற்போதுள்ள சரியான மேம்படுத்தப்பட்ட அறிவியல் ரீதியான தகவல்களை வழங்க வேண்டியது அவசியமானதாகும்.

இது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவியல் சார்ந்த அறிவினை வழங்கும் முகமாக, தேசிய விஷ தகவல் மையம் *“ வீடு சார்ந்த மற்றும் பூச்சிக் கொல்லி தடுப்பு”* என்ற தொனிப் பொருளில் தேசிய விஷங்கள் தடுப்பு வாரத்தை நடாத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் தீர்மானித்துள்ளது.

இந்த சுற்றறிக்கை குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் வீட்டில் நிகழக்கூடிய விஷங்கள் அருந்துதல் போன்றவற்றைத் தடுக்கும் நோக்குடன் பெற்றோர்களுக்கும், பெரியவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடனும் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் தொடர்பில் அதன் அபாயம் குறித்து விவசாய சமூகத்தை சரியான முறையில் விழிப்புணர்வூட்டுவதற்குமாக வெளியிடப்படுகின்றது.

காலம்: 2018 செப்தெம்பர் 10-16
தொனிப்பொருள்: " வீடு சார்ந்த மற்றும் பூச்சிகொல்லித் தடுப்பு"
நோக்கம்: வீட்டு மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளால' ஏற்படும் நச்சூட்டலைத் தடுப்பதும் குறைப்பதும் ஆகும்.

**விஷ தடுப்பு வாரத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகள்**

1. நிறுவனங்கள், பொது மக்கள், மற்றும் ஊழியர்கள் மட்டங்களில் விழிப்புணர்வு ஊட்டும் செயற்திட்டங்களில் ஒன்றைத் தயாரித்தல். உதாரணமாக சுகாதார கல்விசார் விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்தல்.
2. சுற்றறிக்கைக்கு அமைவாக பொது மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நாடாளாவிய ரீதியில் ஏற்பாடு செய்தல்.
3. விஷ தடுப்பு வாரத்தில் சகல நிறுவனங்களிலும் பொருத்தமான பதாகைகள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

- இது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் போதனா வைத்தியசாலை மட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையாவது நடத்துதல் வேண்டும்.
- இந்த தேசிய நிகழ்ச்சித் திட்டம் இலங்கை தேசிய வைத்தியசாலையில் உள்ள தேசிய விஷத் தகவல் மையத்தினால் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதுடன். மேலதிக தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றைப் பெற்றுக் கொள்ள தொலைபேசி இலக்கம் 011-2686143/011-2691111 நீடிப்பு இலக்கம் 2430 மற்றும் மின்அஞ்சல் முகவரி infotoxlanka@gmail.com என்பவற்றின் ஊடாக தொடர்பினை ஏற்படுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.
- தற்போதைய தொனிப் பொருளுக்குரிய தகவலை வெளிப்படுத்தும் கையேடுகள், துண்டுப் பிரசுரங்கள்,மற்றும் சுவரொட்டிகள் என்பவற்றை தேசிய விஷத் தகவல் மையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். கோரிக்கையின் பேரில், தொடர்புடைய பொருட்களை அஞ்சலிலும் அனுப்பி வைக்க முடியும். கோட்பாட்டு ரீதியான விளக்கங்கள், விடயங்கள், கையேடுகள் மற்றும் சுவரொட்டிகளை முகப்புத்தக கணக்கிலிருந்தும் (www.facebook.com/NTPICSL) மற்றும் தேசிய விஷ தகவல் மையத்தின் http://www.toxbaselanka.info எனும் இணையத்தளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
- மேலும், பொது மக்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கல்விசார் விடயங்கள் அடங்கிய DVD ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த DVD யை தேசிய விஷத் தகவல் மையத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.
- இந்த சுற்றறிக்கையை சகல ஊழியர்களுக்கும் தெரியப்படுத்துவதுடன், இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்து கொள்ளும் படியும் நீர் வேண்டப்படுகின்றீர்.

தேசிய விஷத் தடுப்பு வாரம் தொடர்பில் உமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சுருக்க அறிக்கை ஒன்று அத்தகைய செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் சுகாதார கல்வி அதிகாரியினூடாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப்பிரிவின் பணிப்பாளருக்கும் மற்றும் தேசிய விஷத் தகவல் மையத்திற்கும் 2018 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

B. G. S. Gunathilake

பி.ஜி.எஸ் குணதிலக்க

செயலாளர்

சுகாதார, போசனை மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சு